"தமிழ் எங்கள் உயிருக்கு நேர்"

# தமிழ்க் கல்விச்சேவை சுவிற்சர்லாந்து

Tamil Education Service Switzerland

# பொதுத்தேர்வு 2018

## தமிழ்மொழி ஆண்டு 4

**நேரம்: 120 நிமிடம்** **சுட்டெண்:** ____________

**வினாத்தாளில் விடை எழுதுக.**

**பகுதி - 1**

**1. பொருத்தமான விடையின் கீழ்க் கோடிடுக.**

1. சென்ற இடமெல்லாம் சிறப்புப் பெறுபவர்
(மன்னர், கற்றவர், செல்வந்தர்)

2. கிளி பேசும் அதுபோல குயில்
(அகவும், கத்தும், கூவும்)

3. தோமஸ் அல்வா எடிசன் பிறந்த நாடு
(இத்தாலி, பிரான்ஸ், அமெரிக்கா)

4. தாளத்திற்கேற்ப ஆடப்படுவது
(ஓவியம், பாட்டு, நடனம்)

5. பொதுப்பாற் சொல்லாக அமைவது
(அரசன், குழந்தை, மனைவி)

6. நான் கோவிலுக்குச் சென்றேன். இவ்வாக்கியம்
(தன்மை, முன்னிலை, படர்க்கை)

7. 'சின்னக்குருவி பறக்கிறது...' என்ற பாடலைப் பாடியவர்
(பாரதியார், து.உருத்திரமூர்த்தி, சோமசுந்தரப்புலவர்)

8. உயிர்நெடில் எழுத்துகளின் எண்ணிக்கை
(ஏழு, பன்னிரண்டு, ஐந்து)

9. புறச்சுட்டுச் சொல்லாக அமைவது
(அவன், இந்தவீடு, உவன்)

10. நாம் நூல்களைத் தெரிவுசெய்து வாசிக்கக்கூடிய இடம்
(அங்காடி, அலுவலகம், நூலகம்)

11. ஈழத்தின் ஏற்றுமதிப் பொருட்களுள் ஒன்று
(கோதுமை, தேயிலை, அரிசி)

12. வெள்ளத்தில் மிதக்கின்றார்; கெந்தித்தான் பாய்கின்றார்; பந்தடிக்க வரமாட்டார். அவர்
(ஆமை, தவளை, நத்தை)

(12×1=12 புள்ளி)

**2. ஒத்தபொருட்சொல் எழுதுக.**

1. தோழன் ____________________
2. நித்திரை ____________________
3. கதிரவன் ____________________
4. நூல் ____________________
5. வேந்தன் ____________________
6. ஊக்கம் ____________________ (6×1=6 புள்ளி)

**3. எதிர்ப்பொருட்சொல் எழுதுக.**

1. விருப்பு ____________________
2. பகல் ____________________
3. உண்டு ____________________
4. பழைமை ____________________
5. உயர்வு ____________________
6. தொடக்கம் ____________________ (6×1=6 புள்ளி)

**4. சேர்த்தெழுதுக.**

1. நினைவு + கல் = ____________________
2. மின் + குமிழ் = ____________________
3. வாழை + பழம் = ____________________
4. மலை + அகம் = ____________________
5. கூர் + இருள் = ____________________
6. பூ + தோட்டம் = ____________________ (6×1=6 புள்ளி)

**5. பிரித்தெழுதுக.**

1. பூமித்தாய் = ____________ + ____________
2. பொருட்செறிவு = ____________ + ____________
3. தேயிலைச்செடி = ____________ + ____________
4. தமிழ்மொழி = ____________ + ____________
5. நாட்டுக்கூத்து = ____________ + ____________
6. மணிக்கூடு = ____________ + ____________ (6×1=6 புள்ளி)

**6. தரப்பட்ட சொற்களை வைத்து திருக்குறள்களை நிறைவு செய்க.**

| | | |
|---|---|---|
| மக்கள் | மெய்ப்பொருள் | மழலைச்சொல் |
| தறிவு | யாழினிது | யார்யார்வாய்க் |

1. குழலினிது ____________ என்பதம் ____________

____________ கேளா தவர்.

2. எப்பொருள் ____________ கேட்பினும் அப்பொருள்

____________ காண்ப ____________. (6×1=6 புள்ளி)

**7. பொருத்தமான சொற்களை வைத்து பழமொழிகளை நிறைவு செய்க.**

**எ+கா:** **நிறை** குடம் தளம்பாது.

1. அகத்தின் ____________ முகத்தில் ____________.
2. இளமையில் கல்வி ____________ ____________.
3. ____________ மிஞ்சினால் ____________ நஞ்சு.
4. நோயற்ற ____________ குறைவற்ற ____________.



(8×½=4 புள்ளி)

**8. கீழ்க்காணும் வாக்கியங்களில் எழுவாய், செயப்படுபொருள், பயனிலை என்பவற்றைத் தெரிந்து எழுதுக.**

1. மாணவன் பாடம் படித்தான்.
2. குளத்தை எல்லாளன் கட்டினான்.
3. பச்சைக்கிளி பழத்தைக் கொத்தியது.
4. பயறு வெயிலில் காய்கிறது.

| இல | எழுவாய் | செயப்படுபொருள் | பயனிலை |
|---|---|---|---|
| 1. | | | |
| 2. | | | |
| 3. | | | |
| 4. | | | |

(12×½=6 புள்ளி)

**9. கீழ்க்காணும் வினாக்களுக்கு விடை எழுதுக.**

1. செங்கதிரோன் உதயமாகும் திசை எது?

________________________________________

2. தமிழ்மொழியை முத்தமிழ் என ஏன் அழைக்கின்றனர்?

________________________________________

________________________________________

3. 44 ஆண்டுகள் ஈழத்தை ஆண்ட தமிழ் மன்னன் யார்?

________________________________________

4. ஒரு பொருளின் பெயரைக் குறிக்கும் சொல் எது?

________________________________________

5. ஒலி வேறுபாட்டின் அடிப்படையில் மெய்யெழுத்துகளை எவ்வாறு பிரிக்கலாம்?

________________________________________

________________________________________

(5×1=5 புள்ளி)

**10. கீழ்வருவனவற்றுள் ஒன்றினைப்பற்றி 50 சொற்களுக்குக் குறையாமல் எழுதுக.**

1. தோமஸ்அல்வா எடிசன்

2. நூலகம் (8 புள்ளி)

3. காலைக்காட்சி

## பகுதி - 2

**1. அ. கட்டங்களை நிறைவு செய்க.**

ஆண்டின் முதல் திங்கள்

குருவி கட்டுவது

தோகை விரித்து ஆடுவது

கலைகளில் சிறந்தோர்

எடிசனின் கண்டுபிடிப்புகளில் ஒன்று

திருவள்ளுவர் இயற்றியது

(6×1=6 புள்ளி)

**ஆ. கட்டங்களில் உள்ள எழுத்துகளைக் கொண்டு 'இசைக்கருவிகளின்' பெயர்களை எழுதுக.**

| | | | | |
|---|---|---|---|---|
| வீ | ல் | ள | கு | ம |
| லா | த் | ழ | த | யா |
| ப | மி | | ம் | ணை |
| ங் | தா | ழ் | வி | மே |
| பு | ரு | க | ட | றை |

1. ______________________
2. ______________________
3. ______________________
4. ______________________
5. ______________________
6. ______________________

(6×½=3 புள்ளி)

**2. பந்தியைப் படித்து வினாக்களுக்கு விடை எழுதுக.**

கண்ணுக்குத் தெரியாத நுண்ணுயிர்களைக் கிருமிகள் என்று அழைப்பர். இந்தக் கிருமிகளால் பல நோய்கள் உண்டாகின்றன. இலையான்கள் கழிவுப்பொருட்களில் வந்து இருக்கும்போது அவற்றின் கால்களில் நோய்க்கிருமிகள் ஒட்டிக் கொள்ளும். பின் அவை நமது உணவில் வந்து இருக்கும்பொழுது அக்கிருமிகள் எமது உணவில் சேர்ந்துகொள்ளும். அந்த உணவை நாம் உண்ணும்போது அக்கிருமிகள் நமது உடம்பினுள் செல்கிறது. அதனால் நமக்குப் பலநோய்கள் உண்டாகும். எனவே நாம் உணவைப் பாதுகாப்பாக மூடி வைக்கவேண்டும்.

**'சுத்தம் சுகம் தரும்'**

1. நோய்கள் எதனால் உண்டாகின்றன?

______________________________

2. உணவில் நோய்க்கிருமிகளைப் பரப்புவது எது?

______________________________

3. நாம் உணவை எவ்வாறு பாதுகாக்கலாம்?

______________________________

4. சுத்தம் எதனைத் தரும்?

______________________________

(4×1½=6 புள்ளி)

| **பணியகப் பயன்பாட்டிற்கு:** | | | |
|---|---|---|---|
| **விடைத்தாள் மதிப்பீடு** | **முழுப்பெயர்** | **கையொப்பம்** | **மொத்தப்புள்ளிகள்** |
| **முதலாம் முறை** | | | |
| **இரண்டாம் முறை** | | | |
| **இறுதிப்புள்ளிகள்** | | | |